உ

கடவுள் துணை.

# காட்சிக்கண்ணி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, டாரீஸ்கதை, குலேபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொல்லக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது எற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம்மேலும் இதில் அடங்கிய சாரம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

**இதன் விலை ரூபா. 1 0 0.**

கடவுள் துணை.

# காட்சிக்கண்ணி.

## வெண்பா.

சுத்தமுறுமெய்ஞ்ஞானச் சோதியுருவாய்வந்த
வித்தகஞ்சேராமலிங்க வேளுரைத்த-வுத்தமஞ்சேர்
கர்த்தனருளாங்காட்சி கண்ணிகளைச்சிந்தித்தால்
அத்தமுடன் முத்தியுலகாமே.

சாமா-சாப்புதாளம்.

ஆணிப்பொன்னம்பலத்தே கண்காட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி (1)

ஜோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி அம்மா
வீதியுண்டாச்சுதடி (2)

வீதியினிற்சென்றேனவ வீதிநடுவொரு
மேடையிருந்ததடி அம்மா
மேடையிருந்ததடி (3)

மேடைமேலேறினேன் மேடைமேலங்கொரு
கூடமிருந்ததடி அம்மா
கூடமிருந்ததடி (4)

கூடத்தில்நாடவக் கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடமிருந்ததடி (5)

ஏழ்நிலைக்குள்ளு மிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வேனடி அம்மா
என்னென்றுசொல்வேனடி (6)

ஓர்நிலைதன்னிலொளிர் முத்துவெண்மணி
சீர்நிலமாச்சுதடி அம்மா
சீர்நிலமாச்சுதடி (7)

பாரோர்நிலையிற் கருநீலஞ்செய்ய
பவளமதாச்சுதடி அம்மா
பவளமதாச்சுதடி (8)

மற்றோர்நிலையில் மரகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி அம்மா
மாணிக்கமாச்சுதடி (9)

பின்னோர்நிலையிற் பெருமுத்துவச்சிர
பேர்மணியாச்சுதடி அம்மா
பேர்மணியாச்சுதடி (10)

வேறோர்நிலையில் மிகும்பவளத்திரள்
வெண்மணியாச்சுதடி அம்மா
வெண்மணியாச்சுதடி (11)

பகலோர்நிலையிற் பொருந்தியபன்மணி
பொன்மணியாச்சுதோடி அம்மா
பொன்மணியாச்சுதோடி (12)

பதிபோர்நிலையிற் பகர்மணியெல்லாம்
படிகமாச்சுதடி அம்மா
படிகமாச்சுதடி (13)

ஏழ்நிலைமேலேயிருந்த தோர்கம்பம்
இசைந்தபொற்றம்பமடி அம்மா
இசைந்தபொற்றம்பமடி (14)

பொற்றம்பம்கண்டேறும் போதுநான்கண்ட
புதுமையென்சொல்வேனடி அம்மா
புதுமையென்சொல்வேனடி (15)

ஏறும்போதங்கே யெதிரந்தவகைசொல்ல
என்னளவல்லவடி அம்மா
என்னளவல்லவடி (16)

அங்கங்கேசத்திக ளாயிரமாயிரம்
ஆகவந்தார்களடி அம்மா
ஆகவந்தார்களடி (17)

வந்துமயங்க மயங்காமனுனருள்
வல்லபம்பெற்றேனடி அம்மா
வல்லபம்பெற்றேனடி (18)

வல்லபத்தால்வந்த மாதம்பத்தேறி
மணிமுடிகண்டேனடி அம்மா
மணிமுடிகண்டேனடி (19)

மணிமுடிமேலோர் கொடிமுடிநின்றது
மற்றதுகண்டேனடி அம்மா
மற்றது ‑ண்டேனடி (20)

கொடிமுடிமேலாயிரத் தெட்டுமாற்றுபொற்
கோயிலிருந்ததடி அம்மா
கோயிலிருந்ததடி (21)

கோயிலைக்கண டங்கே கோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி அம்மா
கூசாதுசென்றேனடி (22)

கோபுரவாயிலுட் சத்திகள்சித்தர்கள்
கோடிபல்கோடியடி அம்மா
கோடிபல்கோடியடி (23)

ஆங்கவர்வண்ணம்வேல்வண்ணஞ் செவ்வண்ணமுன்
ஐவண்ணமாகுமடி அம்மா
ஐவண்ணமாகுமடி (24)

அங்கவரெல்லாமிங் காரிவரென்ன
அப்பாலேசென்றேனடி அம்மா
அப்பாலேசென்றேனடி (25)

அப்பாலேசென்றேனங் கோர்திருவாயில்
ஐவரிருந்தாரடி அம்மா
ஐவரிருந்தாரடி (26)

மற்றவர்நின்று வழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி அம்மா
மணிவாயிலுற்றேனடி (27)

நண்ணிமவவாயிலிற் பெண்ணோடாணுக
இருவரிருந்தாரடி அம்மா
இருவரிருந்தாரடி (28)

அங்கவர்காட்ட யனுகத்திருவாயிலில்
அன்போடுகண்டேனடி அம்மா
அன்போடுகண்டேனடி (29)

அத்திருவாயிலி லானந்தவல்லியென்
அம்மையிருந்தாளடி அம்மா
அம்மையிருந்தாளடி (30)

அம்மையைகண்டே னவருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி அம்மா
அமுதமுமுண்டேனடி (31)

தாங்குமவளருளாலே நடராஜர்
சந்நிதிகண்டேனடி அம்மா
சந்நிதிகண்டேனடி (32)

சந்நிதியிற்சென்று நான்பெற்றபோது
சாமியறிவாரடி அம்மா
சாமியறிவாரடி (33)

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி (34)

வானத்தின்மீதுமயி லாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி (35)

துள்ளலைவிட்டுத் தொடங்கினேமன்றுடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி (36)

சாதிச்சமயச் சழங்கைவிட்கடனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி (37)

பொய்யையொழித்துப் புறப்பட்டேன்மன்றுடும்
ஐயரைக்கண்டேனடி அக்கச்சி
ஐயரைக்கண்டேனடி (38)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.